**ಕರ್ನಾಟಕ ಪ್ರೌಢ ಶಿಕ್ಷಣ ಪರೀಕ್ಷಾ ಮಂಡಳಿ, ಮಲ್ಲೇಶ್ವರಂ, ಬೆಂಗಳೂರು – 560 003**

**KARNATAKA SECONDARY EDUCATION EXAMINATION BOARD, MALLESWARAM, BANGALORE – 560 003**

**ಎಸ್.ಎಸ್.ಎಲ್.ಸಿ. ಪರೀಕ್ಷೆ, ಮಾರ್ಚ್/ಏಪ್ರಿಲ್ — 2014**

**S. S. L. C. EXAMINATION, MARCH/APRIL, 2014**

**ಮಾದರಿ ಉತ್ತರಗಳು**

## MODEL ANSWERS

ದಿನಾಂಕ : 28. 03. 2014 ] **ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10-T**

Date : 28. 03. 2014 ] **CODE NO. : 10-T**

# ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು

# Subject : First Language — TAMIL

[ **ಪರಮಾವಧಿ ಅಂಕಗಳು : 125**

**[ Max. Marks : 125**

கீழ்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் / முழுமைபெறாத கூற்றுகளுக்கும் ( Incomplete statements ) நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. மிகச் சரியான விடை என்று நீங்கள் கருதுபவற்றை தேர்ந்தெடுத்து அதன் கீழ் உள்ள விடை பகுதியில் விடையை குறியீட்டுடன் முழுவதுமாக எழுதவும் : $15 \times 1 = 15$

1. (C) கடவுள்

2. (C) சேதிமன்னன்

3. (A) பழமொழி நானூறு

4. (B) கப்பல்

5. (D) சிந்தா விளக்கு

6. (C) இராமகவிராயர்

7. (B) மனைவி

8. (D) சின்னப்பிள்ளை

9. (B) டால்ஸ்டாய்

10. (A) நைட்ரஜன்

[ Turn over

11. (B) சிந்தடி

12. (D) பள பள

13. (A) உவமைத்தொகை

14. (B) ய் வ்

15. (D) உழைத்து.

கோடிட்ட இடங்களைத் தகுந்த விடைகளால் நிறைவு செய்க : 5 × 1 = 5

16. குழவி

17. அங்குசம்

18. பாகவதமேள

19. புருடோத்தமன்

20. சூரியகாந்தி.

21. பொருத்துக : 5 × 1 = 5

| | |
|---|---|
| (a) புறநானூறு | iii) எட்டுத்தொகை |
| (b) புரட்சிக் கவி | vi) பாவேந்தர் |
| (c) கவிமணி | i) தேசிக விநாயகம் பிள்ளை |
| (d) ஆழி | v) கடல் |
| (e) வானதி | ii) கங்கை |

பின்வரும் வினாக்களுக்கு ***ஒரு*** வாக்கியத்தில் விடை தருக : 10 × 1 = 10

22. வானத்திலிருந்து மழைத்துளி விழவில்லையென்றால் பசிய புல்லின் தலையைக் கூட காண முடியாது.

23. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.

24. ஆடிப்பாடித் துதி செய்யும்.

25. பெருகிய குளங்களில் மூழ்கி நீராடிய பின்னர் நீல வண்ணப் பட்டுடுத்தினர்.

26. சொத்தெல்லாம் ஓரிடத்தில் குவிவதுதான்.

27. பரங்கிப் பேட்டையில் நெசவுச் சாலையையும், சாயம் துவைக்கிற கிடங்கையும் ஏற்படுத்தி அதற்குத் தலைவராக்கினார்.

28. ஒரு வினைச்சொல் வினையை மட்டுமின்றி அவ்வினையைச் செய்த கருத்தாவையும் குறிப்பது. *எ.கா.* ஆடியவள், பாடியவன்.

29. அடிகள் தோறும் முதல் சீரின் இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது.

*எ.கா.* பொல்லாத ...

சொல்லாலே

30. நாடு வரங்கூறினும் இவ்வோடு வரங்கூராது. வாங்குவோர் கை வருந்துமேயன்றி எப்போதும் உணவு குறையாத தன்மையது.

31. ஒவ்வொரு கதாபாத்திரமும் சிறு திரையைக் கொண்டு மறைத்தபடியே மேடைக்கு வருவது.

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***மூன்று*** வாக்கியங்களில் விடை தருக : 15 × 2 = 30

32. தேடியும் கிடைக்காத செல்வமே, தேன்கடலே, ஈடற்றவனே, ஏழை முகம் பார்த்து எளியேனை எப்போதும் துன்பக்கடலில் ஆழ்த்தாமல் ஆண்டருளும்.

33. பிறருக்கு வழங்குதலும் தான் அனுபவித்தலும் இல்லாதவன் பெற்ற பெருஞ் செல்வம் நாயிடம் கிடைத்த தேங்காயைப் போன்று பயனற்றுப் போகும்.

34. பகைவரின் கோட்டை மதிற்கதவை தாக்கியதால் ஒடிந்த கொம்பு, பகையரசர் மணிமுடிகளை இடறியதால் தேய்ந்த நகமும் கொண்டிருப்பதை நாணி, தன் பிடி முன்னர் தோன்றாது புறங்கடை மறைந்து நின்றது.

35. பருவம் என்னும் நெருப்பில் காய்ச்சிய வாள் போன்றவன். அவன் புருவ நெரிப்பில் பூகம்பம், முழங்கினால் உலகம் செவிடு, உதைத்தால் திசைகள் தவிடு.

36. ஆனந்தரங்கப் பிள்ளையைப் போல் புத்திக் கூர்மையும், எதிர்காலத்தை நுண்மையாக அறிந்து சொல்லும் நிர்வாகத்திறன், மற்ற சமஸ்தானங்களை நிறுத்தவும் வீழ்த்தவும் செய்யவல்ல திறமை மிக்கவர்.

37. தேவியின் திருவருள், போன இடங்களில் ஏதோ கிடைத்தது. இரண்டு நாளைக்கு ஆகாரத்திற்குக் கவலையில்லை.

38. உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான் உள்ளம் நல்ல நிலையில் இருக்கும். அதற்காக நாம் தினந்தோறும் சிறிது நேரமாவது விளையாட வேண்டும்.

39. சுறா மீன்கள் துள்ளிக் குதிக்கும், கூட்டம் கூட்டமாக கடல் புறாக்கள், கடற் பறவைகள் வட்டமிடும் கடற்காட்சியும், சரிவும் செங்குத்தும் மாறி மாறி வரும்.

40. சூரியன் கிரணங்களாலும் பறவைகள் ஆடிப்பாடியும் ஐம்பூதங்கள் தம் தொழில் செய்வதாலும் கடல் தன் அலையாலும் வாழ்த்தும் போது, மனமே நீ மட்டும் இறைவனை வாழ்த்தாதது ஏன் ?

41. கதிரவன் தம்மையும் இருள் என்று நினைத்து வருத்துவானோ என எண்ணி காக்கைகள் தம் பெயரைச் சொல்லிக் கொண்டே ஓடுகின்றன.

42. தான் சொல்லக் கருதிய பொருளை உணர்த்த அதனைக் கூறாது, அதை ஒத்த வேறொரு பொருளைச் சொல்லி விளக்குவது.

43. செய்யுளுக்கே உரியதாய் வரும் சொல். இது ஒரு பொருள் குறித்த பல சொல். பல பொருள் குறித்த ஒரு சொல் என வரும்.

44. முன்னோர்கள் எச்சொல்லை எச்சொல்லால் வழங்கினரோ அச்சொல்லை அவ்வாறே வழங்குவது மரபு.

*எ.கா.* ஆட்டிடையன், பனையோலை.

45. செய்யுளில் இசையை நிரப்புவதற்காக செய்யுளில் இடம் பெற்றுள்ள சில ஒற்றெழுத்துகள் தன் அரை மாத்திரையிலிருந்து நீண்டு ஒலிக்கும். அவ்வாறு ஒலித்ததை உணர்த்த அதே எழுத்துக்கள் மீண்டும் மீண்டும் எழுதப்பெறும். இலங்ங்கு.

46. தீயவழியில் சேர்த்த செல்வம் தீண்டக்கூட முடியாமல் இனிப்பான ஒன்றை உண்ணக்கூட முடியாமல் அமைதியாக உறங்கமுடியாமல் அல்லல் உறுவர்.

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***ஐந்து*** வாக்கியங்களில் விடை தருக : 4 × 3 = 12

47. மான்தோலில் செய்யப்படும். ஆட்டுவிப்போனின் கைத்திறத்தைக் கொண்டிருக்கும். இடமிருந்து வலமாக நகர்ந்து செல்லும் வீரனொருவன் அம்பை எடுத்துச் செலுத்துவதும் பகைவனின் தலை அறுந்து விழுவதும் உண்டு.

*அல்லது*

சீவகனின் மகள் மனோன்மணி சேர மன்னனை கனவில் கண்டு காதலுறுகிறாள். அமைச்சன் குடிலன் சூழ்ச்சியால் புருடோத்தமன் படையெடுத்து வரும்படி செய்கிறான். சீவகன் தம் மகளுக்கும் அமைச்சர் மகன் பலதேவனுக்கும், திருமணம் செய்ய நினைத்து குலகுரு சுந்தர முனிவர் முன்னிலையில் ஓர் அறையில் மணச் சடங்கியற்ற, அவ்வறைக்குள் குடிலன் காட்டிய சுரங்க பாதை வழி வந்து சேர்ந்தான் புருடோத்தமன். அவனுக்கே மாலையிடுகிறாள் மனோன்மணி.

48. பத்து நாட்களுக்கு விருந்து, வானவேடிக்கை, சரவத்தி, வருபவர்களுக்கு வெகுமானம், பணம், பாக்கு, வெற்றிலை, கவர்னர் உட்காரும் போதும், சாப்பிடும்போதும் 21 பீரங்கி சுட்டனர்.

49.

| அடுக்குத் தொடர் | இரட்டைக்கிளவி |
|---|---|
| 1. அடுக்கி வரும் | 1. இரட்டையாக வரும் |
| 2. பிரித்தால் பொருள் தரும் | 2. பிரித்தால் பொருள் தராது |
| 3. விரைவு, உவகை அச்சம் காரணமாக வரும் | 3. குறிப்புப் பொருளில் வரும். |

*அல்லது*

செய்யுளில் ஓசை குறைந்த இடத்து குறைந்த ஓசையை நிரப்புவதற்காக செய்யுளில் இடம் பெற்றுள்ள நெட்டெழுத்துக்கள் ஏழும் தன் இரண்டு மாத்திரையிலிருந்து நீண்டு ஒலிக்கும். அதனை உணர்த்த அதன் இன எழுத்துகள் அதன் அருகில் குறியீடாக எழுதப்பெறும். தூஉம் மழை. வகை இன்னிசை, சொல்லிசை, செய்யுளிசை.

50. புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும்.

*அல்லது*

ஈற்றடி முச்சீர், ஏனைய அடி நாற்சீர், இயற்சீர், வெண்சீர் விரவி, ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு வாய்பாடுகளுள் ஒன்றைப்பெற்று செப்பலோசை உடையதாய் வருவது.

*குறிப்பு :* பின்வரும் வினாக்களுக்கு இடம் சுட்டிப்பொருள் விளக்குக : 5 × 3 = 15

51. *இடம் :* பாஞ்சாலி சபதம், வீமன் உரை.

*விளக்கம் :* தருமன் சூதில் அனைத்தையும் தொலைத்தான். தம்பியரை வைத்திழந்தான். ஆனால் துருபதன் மகளை வைத்து இழந்ததைப் பொறுக்க மாட்டாமல், தன் தம்பியை நோக்கி இவ்வாறு கூறினான்.

52. *இடம்* : டால்ஸ்டாயும் பூர்ச்ச மரங்களும்; பண்ணை ஆட்கள் கூறியவை.

*விளக்கம்* : பூர்ச்ச மரங்கள் வீடு கட்ட ஏற்றவை. எங்களுக்கு வெட்டிக்கொள்ள அனுமதி தாருங்கள். எங்களுக்குச் சொந்தமாக வீடு இல்லை என்றனர்.

53. *இடம்* : ஒரு பரிசு கொண்டு வந்தேன். சுதந்திரதேவியின் கூற்று

*விளக்கம்* : வைரமுத்து சென்ற விமானம் சுதந்திர தேவி சிலையைத் தொட்டுச் சென்றது. அப்போது என்ன கொண்டு வந்தாய் என்று கேட்டாள் தேவி. அதற்கு இந்தியப் புறாவொன்று என்றார் கவிஞர். உடனே தேவி மேற்கூறியவாறு கேட்டாள்.

54. *இடம்* : ஏழையின் தமிழன்பு. அந்தணர் கூற்று.

*விளக்கம்* : இவர்தாம் மகாவித்வான் என்பதை அறிந்த அந்தணர் மகிழ்ச்சியால் கூறியவை.

55. *இடம்* : புதையல் யாருக்கு - ஊர்ப் பெரியவர் பூங்குன்றன் கூறியது.

*விளக்கம்* : கரிகாலன் இளையவன். தம் வழக்கை உணர்ந்து நல்ல தீர்ப்பு வழங்குவான் என்ற நம்பிக்கை இன்றிக் கூறியது.

56. பழமொழி விளக்கம் : $1 \times 3 = 3$

அ) மாணாக்கர் தனக்குக் கிடைக்கும் காசுகளை வங்கியில் சேமிக்கலாம். சிறு துளி பெருவெள்ளம்.

ஆ) வழக்காடு மன்றத்தில் ஒரு முறை அறிஞர். அரியல். தன் வாதத்தில் தோல்வியைத் தழுவினார். யானைக்கும் அடி சறுக்கும்.

இ) பொய்ச்சான்று கூறிய மாறன், உண்மையை உரைக்காமல் மௌனமாக நின்றான். அவன் கண்கள் கலங்கின. உள்ளக் குமுறல் வெளிப்பட்டது. அகத்தின் ...

அடிபிறழாமல் எழுதுக : $1 \times 4 = 4$

57. நாடா கொன்றோ காடா கொன்றோ

அவலா கொன்றோ மிசையா கொன்றோ

எவ்வழி நல்லவ ராடவர்

அவ்வழி நல்லை வாழிய நிலனே

- ஔவையார்

*அல்லது*

மலைகளிலே உயர்மலையை மகிழ்ந்தணியும் நாடு
மாநதியுள் வானதியே மல்குதிரு நாடு
உலகில்விளை பொருளெல்லாம் உதிக்கின்ற நாடு
ஒண்தொழிலும் வாணிகமும் ஓங்கிய சீர் நாடு
கலைகளொடு மறைமுடியைக் கண்டதவ நாடு
கடவுளருட் கோயில்களே காட்சியளி நாடு
பலசமய உண்மையெலாம் பரந்தொளிரு நாடு
பழமைமிகு புகழ்பெருகு பாரதநன் னாடே.

- திரு. வி. கலியாணசுந்தரனார்

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் எட்டு வாக்கியங்களில் விடை தருக : 3 × 4 = 12

58. காதில் - குண்டலகேசி, கையில் - வளையாபதி, மார்பில் - சீவகசிந்தாமணி, இடையில் - மணிமேகலை, தாவணியாக - சிலப்பதிகாரம், தலையில் - சூளாமணி, செங்கோலாய்த் - திருக்குறளை தாங்கிய தமிழன்னை நீடு வாழ்க.

*அல்லது*

எங்கள் வானத்தை மேகம் மட்டும் சூழட்டும். வெடிகுண்டு புகை வேண்டாம். அமிர்த மழை விழட்டும். அமில மழை வேண்டாம். எங்கள் சந்ததிகள் நாளை பூக்களைத் திறந்தால் மகரந்தம் சிந்தட்டும் மாமிசம் வேண்டாம்.

59. கூத்தின் தலைவன் பாகவதன். பாட்டும், ஆடலும் இணைந்தது. சலங்கை, மாலை, எதிர் எதிர் நின்று ஆடுவன் — கோடங்கி ஒப்பனைகளுடன் இருப்பான். முன் மேள, பின் மேள உண்டு. தசாவதாரம், இராமாயணக் கதைகள் அடிப்படை. கூத்தின் போது மது அருந்துவதில்லை.

*அல்லது*

கூலிப் பெண்களின் தலைவியாக செயல்பட்டார். கூலியைப் பெற்றுத் தந்தார். பில்லுக் களஞ்சியம் தொடங்கி, சிறு சேமிப்பிற்கு ஊக்கம் தந்தார். சிறு தொழில், மருத்துவம், கல்வி மேம்பாட்டிற்கு உதவியது. வருவாயைப் பெருக்க ஊர்ப் பொதுக் குளத்தை குத்தகை எடுத்தார். வைகை வட்டாரக் களஞ்சியம் என்ற பெயரில் தமிழகம் மட்டுமின்றி கருநாடகம், ஆந்திரா வரை. பெண்கள் பொருளாதார அடிமையிலிருந்து மாற்றம் கண்டனர்.

60. பூங்குன்றன் தம் நிலத்தை இளநாகனுக்கு நூறு பொற்காசுகளுக்கு விற்றான். இளநாகனுக்குப் புதையல் கிடைத்தது. அப் புதையலில் தமக்கு உரிமையில்லை பூங்குன்றனின் முன்னோர்கள் புதைத்து வைத்தது. பூங்குன்றனுக்கு உரியதாக வேண்டும் என்றார். பூங்குன்றன் நிலத்தை விற்றதுடன் அதில் வரும் எப்பொருளுக்கும் நான் உரிமை கொள்ள முடியாது என்றார்.

*அல்லது*

புத்தகங்கள் இல்லை. யாரிடமாவது வாங்கிப் படிக்கலாம் என்றால் யாரும் தருவதில்லை. வறுமை. காலம் முழுதும் வயிற்றுப் பிழைப்பிற்காய் அலைய வேண்டியுள்ளது. கால் விலங்கு உண்டு, பிள்ளைகளும் உண்டு. சாண் ஏற முழம் சறுக்குகிறதே என்ன செய்வேன் ?

61. பகுதியினைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுதல் : 4 × 1 = 4

விடைகள் :

1. பருவத்தே பயிர் செய், இளமையில் கல் என்பது.
2. இளமைப் பருவத்தில் ஒருவன் தவறாமல் கல்வி கற்றுத் தேற வேண்டும்.
3. உரிய காலத்தே செய்யும் பயிரைப் போன்றது.
4. தம் வாழ்வின் பெரும் பயன் அடைவது திண்ணம்.

62. கட்டுரை : 5

- ✳ கட்டுரைக்கேற்ற வடிவமைப்பு
- ✳ தலைப்பை விளக்கி முன் உரைக்கும் முன்னுரை.
- ✳ தலைப்பை ஒட்டிய சிந்தனை, பரந்த நோக்கம், வகை, செயல் வகை குறித்த சிறு தலைப்புகள்.
- ✳ நன்மை, தீமை குறித்த பகுப்பு
- ✳ சமூக நலன், குறைகள் குறித்த சிறு தலைப்பு
- ✳ அறிவியல், சமூகம், பண்பாடு குறித்த மாற்றம், தேவை குறித்த கட்டுரையாளரின் உளக்கருத்து அமைந்த முடிவுரை.

63. விண்ணப்பம் 1 × 5 = 5

அனுப்புநர் : இடம் :

நாள் :

பெறுநர் :

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் :

( விண்ணப்பப் பொருள், வேண்டல் )

மிக்க நன்றி !

இங்ஙனம்

தங்கள் உண்மையுள்ள,

*அல்லது*

மடல்

நாள் :

இடம் :

அன்புள்ள ................ ,

( மடல் கருத்து )

இவண்

அன்பு மறவா,

முகவரி

| |
|---|
| பெயர், |
| எண், தெரு |
| பகுதி |
| ஊர், வட்டம் |